CC.No.135 /2018 நாள் : 11.02.2026

PW 9 - திரு.ராமசாமி

**<u>சாட்சி மனுவின் பெயரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப் பட்டு எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** :

1) எனது முதல் விசாரணையில் விபத்து ரோட்டின் மேல் புறத்தில் நடந்ததாக கூறியுள்ளதற்கு வாகனம் எதுவும் முந்தி சென்றதா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஞாபகமில்லை. காரில் எத்தனை பேர் பயணம் செய்தார்கள் எத்தனை பேருக்கு காயம் ஏற்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது இருசக்கர வாகனத்தில் வந்த நபர்களுக்கு காயம் ஏற்பட்டது மேலும் வாகனம் ஓட்டி வந்த நபரை பார்த்தேன். வாகனம் ஓட்டி வந்த நபரை நான் போலீசாருக்கு அடையாளம் காண்பித்ததாக எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளதற்கு நான் எங்கு வைத்து அடையாளம் காண்பித்தேன் என்றால் நீதிமன்றத்தில் வைத்து அடையாளம் காண்பித்தேன்.

2) விபத்து நடந்த சமயத்தில் அரசு பேருந்து அங்கிருந்தது என்றால் எனக்கு ஞபாகமில்லை. விபத்து ஏற்பட்டவுடன் நான் காவல் நிலையத்திற்கு எந்த தகவலும் சொல்லவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த பிறகு போலீசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் மறுநாள் விசாரித்தார்கள். சம்பவம் நடந்த அன்று என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். விபத்து அன்று எதிரி தான் வாகனத்தை ஓட்டினார் என்ற விவரத்தை நான் யாரிடமும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2026.02.11 17:07:31 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.